சென்னையில் அரசினர் மாணவர் விடுதிகள்.

*வினா எண். 652—திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1978-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23-ம் நாள் அன்று சர்வ கட்சியினர் நடத்திய 'பந்த்'-ஐ முன்னிட்டு சென்னையில் விடுதியில் தங்கியிருந்த தாழ்த்தப்பட்ட மற்றும் ஏழை மாணவர்களை இரு தினங்களுக்கு முன்பாகவே விடுதியிலிருந்து கட்டாயமாக வெளியேற்றியதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதனால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அரசு என்ன உதவி செய்து அனுப்பியது ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் அன்று சர்வகட்சியினர் நடத்திய ''பந்த்''-ஐ முன்னிட்டுச் சென்னையிலுள்ள கல்லூரி மாணவ மாணவியர் மற்றும் தொழிற்பயிற்சி மாணவர் விடுதிகள் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாள் முதல் 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் வரை மூடப்பட்டன.

(ஆ) மேற்படி விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களுக்கு சொந்த ஊருக்குச் செல்ல வழிச்செலவுக்குப் பணம் அவர்களுக்கு அளிக்கப்படும் போக்குவரத்து மற்றும் தினசரி படிகளிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற விதிமுறைகளுக்குட்பட்டு வழங்கப்பட்டது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் அன்று நடைபெற்ற பந்தின் பொழுது என்ன காரணத்தை முன்னிட்டு அரிசன மாணவர்களுக்கு முன்கூட்டியே விடுப்பு அளித்து வீட்டுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது ? அரிசன மாணவர்கள் ஹாஸ்டலில் தங்கியிருந்தால் அதன்மூலம் ஏதாவது அரசுக்குத் தொந்திரவுகள் ஏற்படும் என்ற அடிப்படையில் அவர்களை வீட்டுக்கு அனுப்பினார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பொதுவாக மாணவர்களின் பாதுகாப்புக்காகத் தான் இதுபோன்ற நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கிறது.

REPORTING SECTION

1979 ஏப்ரல் 7]

திரு. ரா. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, அதே விடுதியில் இருக்கும் மாணவர்களை அதற்குப் பிறகு நாடாளுமன்றத்தில் இந்திரா காந்தி அம்மாளுக்குத் தண்டனை அளிக்கப்பட்ட பொழுது ஏற்பட்ட கிளர்ச்சி சம்பந்தமாக அந்த ஹாஸ்டல் மூடப்பட்டு இதேமாதிரி வீட்டுக்கு அனுப்பப்பட்டார்களா ? இல்லா விட்டால் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அதுபற்றி விவரம் இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் அன்று நடந்த பந்தின் பொழுது இரண்டு தினங்கள் மட்டும் ஹாஸ்டல் மூடப்பட்டு அந்த மாணவர்கள் வெளியேற்றப் பட்டால், அவர்கள் ஊருக்குச் செல்லவும், தங்கவும், உணவு அருந்தவும் மிகவும் அல்லல் பட்டிருப்பார்களே, ஆகவே, இது மெத்த அவசியம்தானா ? இது சரியல்ல என்பதை அரசு உணர்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அவர்கள் ஊருக்குச் செல்ல வேண்டுமென்பதற்காக வழிச் செலவுக்குத் தொகை கேட்டு அது தரப்பட்டிருக்கிறது. வேறு எந்தவிதமான காரணத்திற்காகவும் இந்தத் தொகை வழங்கப் படவில்லை. மாணவர்களின் பாதுகாப்புக்காகத்தான் அரசு உதவுகிறது. இது சரிதான்.

திரு. ரா. கிருஷ்ணன் : துணைத் தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 23 ஆம் நாள் அன்று, தொழிலாளர் சம்பந்தமாக ஒரு முழு வேலை நிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது, அதில் மாணவர்களுக்கு எந்தவிதத்திலேயும் சம்பந்தம் இல்லையே. அப்படியிருக்கும்பொழுது அந்த விடுதியை மூட வேண்டிய அவசியம் என்ன ? இப்படி ஊருக்குச் செல்லும் பொழுது வழிக்காசு கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அது ஸ்காலர்ஷிப் பணத்திலிருந்துதான் கொடுக்கப்படுகிறது. ஏற்கனவே வழங்கப்படும் தொகையான 65 ரூபாய் போதாது. அப்படியிருக்கும்பொழுது வழிச்செலவுக்கு என்று காசு கொடுத்தால் ஏற்கெனவே தருகின்ற வசதிகள் குறைக்கப்படுமே, இது முறை தானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ஏன் மூடப்பட்டது என்பதற்கான காரணத்தை முன்பே சொல்லியிருக்கிறேன். உபகாரச் சம்பளத்திலிருந்து இந்த தொகை பிடிக்கப்படவில்லை. போக்குவரத்துக் கட்டணத்திற்காகக் கொடுக்கப்படும் தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தத் தொகையையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ளலாமா என்பது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.